# தரம் 10

## முதலாந் தவணை – 2020

## செயலட்டை

## அலகு 06. தீபாவளி

01. அ. விசேட நாட்கள் எமக்கு எதற்கு வழிகாட்டுகின்றன?
    ஆ. விஷேட நட்களில் நாம் செய்யும் புறத்தூய்மையின் பாற்படும் காரியங்கள் எவை?
    இ. விஷேட நாட்களில் நாம் கைக்கொள்ளும் வழக்கங்களாக அமைபவை?
    ஈ. திருக்கோயில்களில் பகற்பூசை, இராப்பூசை என்பன எவ்வழிபாடுகளுடன் ஆரம்பமாகின்றன?
    உ. தீபாவளிப் பண்டிகை எப்போது கொண்டாடப்படும்?
    ஊ. தீபாவளி என்பதன் பொருள் யாது?
    எ. தீபாவளி எந்த அசுரனின் கதையுடன் தொடர்புபட்டது?
    ஏ. தீபாவளியின் தத்துவம் யாது?

**விடைகள்.**

01. அ. இறையுணர்வை வளர்த்துக் கொள்ளவும், அதன்மூலம் சிந்தனை, சொல், செயல் என்பவை புனிதப்படவும் வழிாட்டுகின்றன.

ஆ. வீட்டைக் கழுவுதல், மெழுகுதல், தோரணங்கள் கோலங்களால் அலங்கரித்தல், நீராடிப் புதிய ஆடை தரித்தல் போன்றன.

இ. புதிய பாத்திரங்களிலே உணவைச் சமைத்தல், அதை இறைவனுக்கு நிவேதனமாக்குதல், உறவினர், விருந்தினருடன் கூடி உண்ணுதல் போன்றன.

ஈ. பகற்பூசை - சூரிய வழிபாட்டுடன்
இராப்பூசை – சந்திர வழிபாட்டுடன்

உ. ஐப்பசி மாத தேய்பிறை (கிருஷ்ண பட்ச) பதினான்காம் நாள் (சதுர்த்தசி திதி)

ஊ. தீப + ஆவளி எனப் பிரித்து, தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்தல் எனப் பொருள்கொள்வர்

எ. நரகாசுரன்

ஏ. ஒவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைதல்